திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சாத்தனூர் நீர் மின் திட்டம் விரிவான திட்டம் தயாராகி விரைவிலே ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பழனிக்கு அருகிலே சண்முகா நீர் மின் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று 2, 3 ஆண்டுகளாக இந்த அவையிலே அறிவிக்கப்பட்டு வந்தது. அதனுடைய வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டதா ? அதனுடைய மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மேட்டூர் அனல் மின் நிலையத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம்.

233 (*வினா 18196)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேருக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 10–6–83 முடிய 127 நபர்களுக்கு தமிழ்நாடு மின் வாரியத்தில் தற்காலிகமாக வேலை அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, இப்படி நிலம் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பகுதியிலே உள்ள அந்த மக்களுக்கு தற்காலிகமாக வேலை கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மக்களுக்கு எந்த மாதிரியான வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தகுதிக்கேற்ப வேலைகள் தரப்படுகின்றன. முதலில் தற்காலிகமாகத்தான் தருவார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 9]

திரு. மா. சின்னராசு: தலைவர் அவர்களே, மேட்டூர் அனல் மின் நிலையத்திற்காக எடுக்கப்பட்ட நிலத்தில் பலர், அரசாங்க நிலத்திலே சொந்தப் பட்டா அவர்களுக்கு இல்லாமல் இருந்து வந்ததாகத் தெரிய வருகிறது—அவர்களுக்கும் இந்த வேலைகளில் முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக அரசாங்க நிலத்தில் தண்டத் தீர்வை கட்டி பயிர் செய்து வந்தார்கள். அந்த நிலங்களை கையகப்படுத்துகிறபோது அந்த நிலங்களுக்கு உரிய இழப்புத் தர முடியவில்லை. ஆகவே மனிதாபிமான அடிப்படையில் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுக்கலாம் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இவ்வாறு புதிய தொழிற்சாலைகள் அல்லது பல்வேறு அமைப்புகள் ஏற்படுத்துகிறபோது—ஏற்கெனவே இந்தப் பிரச்சினை நெய்வேலியிலே எழுந்தது, இப்போது இந்த மேட்டூர் பகுதியிலே எழுகிறது, மனிதாபிமான அடிப்படையில் பார்க்காமல் நிலங்களை இழந்த அந்த மக்களுக்கு வாழ்வு அளிக்கக் கூடிய முறையிலே நிலங்களை இழந்துவிட்டவர்களுக்கு மாற்று நிலங்களைக் கொடுக்கவும் அவர்களுடைய குடும்பத்திலே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவும் எடுத்துக் கொண்ட நிலத்திற்கு நட்ட ஈடு கொடுப்பதற்கும் முயற்சிகளை எடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இழக்கிற சொத்துக்களுக்கு இழப்பீடு தரப்படுகிறது. ஆக சொத்துக்கள் உள்ளவர்களுக்கு அதில் பாதகம் ஏற்படுவது இல்லை. சொத்துக்கள் இல்லாமல் இருக்கின்ற ஏழை மக்களுக்கு அந்த பாதகம் ஏற்படுகிறது. அவர்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு குடும்பத்தில் ஒருவருக்காவது வேலை தர வேண்டும் என்று நாம் முயற்சித்து வருகிறோம். அதை கொள்கையாக வகுக்க முடியாது. ஏன் என்றால், சில இடங்களில் வெளியேறுகின்ற குடும்பங்களின் அளவு பெரிதாகவும், இருக்கின்ற வேலைகளின் அளவு குறைவாகவும் இருக்கிறபோது சிக்கல் வந்து விடும்.

அறநிலைய ஆட்சித் துறையில் பணிபுரியும் ஆலய நிர்வாக அதிகாரிகள்.

234 (*வினா எண் 17399)—திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அறநிலைய ஆட்சித் துறையில் துணைக் கமிஷனர்கள், மற்றும் உதவிக் கமிஷனர்கள் அந்தஸ்தில் பணி புரியும் கோவில் நிர்வாக அதிகாரிகள் மொத்தம் எத்தனை பேர்?